# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

## THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C.201/2019 |
| Deposition of Witness for Prosecution | : P.W.6 (L.W.7 ) |
| Name | : R.Thangavel |
| Father's Name | : Rajamani |
| Village | : Sarakkalvilai |
| Taluk | :Agastheswaram |
| Calling | : Doctor |
| Religion | : Hindu |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.12.2023

**(2, 4 எதிரிகள் ஆஜர். 1, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை-**

1. நான் தற்போது இ.எஸ்.ஐ மருத்துவமனை நாகர்கோவிலில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.09.2016 ம் தேதி இரவு 09.35 மணியளவில் தக்கலை அரசு தலைமை மருத்துமனையில் நான் பணியில் இருந்த போது சுன்னகாரவிளையை சார்ந்த சந்திரகுமார் மகன் விஷ்னு என்பவர் அவராகவே சிகிட்சைக்காக வந்தார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரை விசாரித்தபோது 04.09.2016 ம் தேதியன்று இரவு 08.30 மணியளவில் அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் மணலி பாலம் அருகில் வைத்து வெட்டுகத்தியால் தாக்கியதாக என்னிடம் கூறினார். அவரை பரிசோதித்த போது அவரது உடலில் கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) இடது வயிறுபகுதியில் 8x1x1cm அளவில் சிதைவு காயம் காணப்பட்டது. 2) இடது வயிறுபகுதியில் 4x1x1cm அளவில் சிதைவு காயம் காணப்பட்டது. 3) இடது சுண்டுவிரலில் 2x1x1cm அளவில் சிதைவு காயம் காணப்பட்டது.

2. அவரை முதலுதவி சிகிட்சை செய்து மேல்சிகிட்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவர் ஆசாரிப்பள்ளம் மருத்துவமனையில் 04.09.2016 லிருந்து 01.10.2016 வரை உள்நோயாளியாக சிகிட்சை அளிக்கப்பட்டு சிகிட்சையில் இருந்து விடுவிக்கப்ட்டார். காயம்பட்ட விஷ்னு என்பவருக்கு மார்பு, இடது கை பகுதியில் தனிதனியாக எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. அதில் எந்தவித எலும்பு முறிவும் இல்லை என்று தெரியவந்தது. பிளாஸ்டிக்சர்ஜன் கருத்துரையின் அடிப்படையில் காயம்பட்ட நபருக்கு இடது சுன்டுவிரலில் தசை நார் கிழிவு ஏற்பட்டதாக சான்றழிக்கப்பட்டது. அந்த காயமானது கொடுங்காயம் என்று அகமதுரபிக் என்பவரால் சான்றழிக்கப்பட்டது. மேற்படி கருத்துரைகளின் அடிப்படையில் 3 வது காயம் கொடுங்காயம் என்றும் 1, 2 காயம் சாதாரண காயம் என்று நான் சான்று வழங்கினேன். நான் கொடுத்த **விபத்து பதிவேட்டு நகலுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2 ஆகும்**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

பொதுவாக வெட்டுகத்தியின் கூர்மையான பகுதியில் தாக்கும் போது ஆழமான காயமும், வெட்டுகாயமும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். சிதைவு காயமானது கரடுமுரடான பகுதிகளில் விழும்போது கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,

பத்மநாபபுரம்